# இலக்கியத்தில் விழாக்கள்

2

**முனைவர் ம. பிரேமா,**

**உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை**

**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 2**

**ஆய்வுச் சுருக்கம்**

கோயில் என்றாலே திருவிழா ; திருவிழா என்றாலே கோயில்' என்ற நினைவு அனைவருக்கும் வரும். விழைவு : விழை என்றால் விருப்பம் என்று பொருள்படும். விழாக்கள் மகிழ்வை அடிப்படையாகக் கொண்டு மக்களால் விரும்பி நடத்தப் படுபவையாகும்.கொண்டாட்டமும் மகிழ்ச்சியும்இ பொழுது போக்கும் நல்லுறவுமே விழாக்களின் நோக்கமாகும்.தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவனவற்றுள் திருவிழாக்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

**திறவுச்சொற்கள்:**

சாறு - விழா, 2.கயம்-நீர்நிலை, 3.ஆயிரங் கண்ணோன் - இந்திரன், 4.ஞாலம் - உலகம், 5.வாரணம் - கோழி, 6.உரவுநீர் - கடல் 7.,மறுகு - தெரு,8.களமர் - உழவர், 9.விழவு -விழா.

**முன்னுரை**

மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுபவை விழாக்கள் ஆகும். ஆடலும் பாடலும் விழாக்களின் முக்கிய அம்சமாகும். கொண்டாட்டம், இன்பம், பொழுதுபோக்கு, நல்லுறவு முதலியவை விழாக்களின் இலக்காக அமைகின்றது. தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவனவற்றுள் திருவிழாக்கள் சிறப்பிடம் பெறுகின்றன.பண்டைய காலத்திலிருந்தே விழாக்கள் நிகழ்ந்ததை இலக்கியங்கள் வழி தெரிந்து கொள்ள முடிகின்றது. விழவு, சாறு, திருவிழா, நோன்பு, திருநாள் என்று விழாவிற்கு பல பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. விழாக்கள் உடலுக்கு ஓய்வும் உள்ளத்திற்கு இன்பமும் தரவல்லன. சங்கத் தமிழர் வாழ்வியலின் பிரதிபலிப்பாக விழாக்கள் இருந்தன என்பதை ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**விழாவின் நோக்கம்:**

அழகிய குடில்களைக் கொண்ட சிற்றூரில் மக்கள் எப்பொழுதும் விழாக்களைக்(சாறு) கொண்டாடி மகிழ்ந்துள்ளனர் என்பதை குறுந்தொகை

**“சாறுகொள் ஊரின் புகல்வேன் ---------மன்ற** 1

என்றுரைப்பதிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

**'நுங்கோ யாரென வினவின் ,எங்கோக்**
**களமர்க்கு அரித்த விளையல் வெங்கள்**
**யாமைப் புழுக்கின் காமம் வீட ஆரா**
**..'மடியா விழவின் யாணர் நன்னாட்டுள்ளும் 2**

இப்பாடலில் பிசிராந்தையார் உன்னுடைய மன்னன் யாரென்று என்னிடம் கேட்டால், என்னுடைய மன்னன் உழவர்களுக்காக வடிக்கப்பட்டக் கள்ளினோடு ஆமையின் அவித்த இறைச்சியை உழவர்களுக்குக் கொடுக்க அவர்கள் அதனை உண்டு,சுடப்பட்ட கொழுத்த விலாங்கு மீனின் இறைச்சியைத் தங்கள் கன்னங்களில் அடக்கித் தம்முடையத் தொழிலை மறந்து நீங்காத விழாக்களைக் கொண்டாடும் வளம் மிகுந்த சோழ நாட்டின் உறையூரில் உள்ள மன்னன் கோப்பெருஞ்சோழனே என் மன்னன் என்பேன் என்று பதிலளிப்பதிலிருந்து மன்னர்கள் உழவர்களை மகிழ்விக்கும் பொருட்டு விழா எடுத்துள்ளனர் என்ற செய்தி அறியலாகின்றது.விழா நடைபெறும் இடத்திற்குச் சென்றால் அவ்விடத்தில் வாழுகின்ற நல்லோர்களைப் பார்க்க முடியும். அவர்களிடமிருந்து நற்சொற்களைப் பெறமுடியும். அதனால் நம்முடைய வாழ்வு சிறக்கும். எனவே விழாவிற்கு செல்வோம் என்கிறாள் தலைவி. அவளது சிந்தனையை

**“பேர்ஊர் கொண்ட ஆர்கலி**

**விழவின்”(குறுந்தொகை:223:1-3)**என்று வெண்ணாகனார் குறிப்பிடுகின்றார்.

நல்லாரைக் காண்பதுவும் நன்று அவர் வாய்ச்;சொல் கேட்டல் அதனினும் நன்று.**“விழவு மேம்பட்ட என் நலனே”(குறுந்தொகை:125:3-4)** இப்பாடல் மூலம் திருவிழாக்களால் பெண்களிடம் உண்டாகும் தன்னம்பிக்கை வெளிப்படுகிறது.

**திருமால்:**

தமிழ்மக்கள் விழாக்களை இறைவனைத் தொடர்புப்படுத்தியே கொண்டாடி உள்ளனர். திருவோண நட்சத்திர நன்னாளில் வலிமை மிக்க அசுரரை அழித்துப் பொன்னால் செய்யப்பெற்ற மாலையை அணிந்த கருநீல நிறமுடைய திருமால் பிறந்தார். அந்நாளில் கொண்டாடப்பட்ட விழா ‘ஓணவிழா’ என்று அழைக்கப்பட்டது. இந்நாளில் யானை அணிவகுப்புத் திருவிழா நடைபெறும்.அப்போது போரில் விருப்பமுள்ள மறவர் யானைப் போரைக் காண விரும்பிக் களிறுகளை மோதவிட்டு மகிழ்ந்;தனர்.அதனைக் காண மக்கட்கூட்டம் வரும்.அக்கூட்டம் விரைந்து வரும் யானையைக் கண்டு அஞ்சி ஓடும்.அப்போது அவர்கள் மார்பில் அணிந்துள்ள காழகம் என்னும் அணிகலன் கழன்று விழுவதையும் பொருட்படுத்தாமல் ஓடுவர்.அவை நிலத்தில் கிடந்து ஓடுபவர்களின் கால்களில் உருத்தும். இதனை

**“கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்**

**மாயோன் மேய ஓண நன்னாள் 3**

என்று மதுரைக்காஞ்சி செப்புகின்றது.இவ்விழா இன்றும் கேரளாவில் வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

“**விழவுடை விழுச்சீர் வேங்கடன்”(அகநானூறு:61)**திருவேங்கடத்தில் திருமாலுக்கு விழாவானது சிறப்பாக நடைபெற்றமையை இது சுட்டுகின்றது.திருமாலைப் பற்றி கூறுகிறபொழுது நால்வகை யுகங்களைப் பற்றி பரிபாடல்

“**நால்வகைஊழிஎன்நவிற்றும்சிறப்பினை(பரிபாடல்:3)**

என்கிறது. இதன்மூலம் திருமால் தெய்வ வணக்கம் வெளிப்படுகின்றது.

**உள்ளிவிழா:**

கொங்கர் இன மக்கள் கொண்டாடிய விழா. இவர்கள் இடையில் மணியைக் கட்டிக் கொண்டு தெருவில் ஆடுவர் என்பதனை

“**-----------கொங்கர்**

**மணியரை யாத்து மறுகின் ஆடும்**

**உள்ளி விழவின் அன்ன**

**அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே”(அக:368)**

என்கிறது அகப்பாடல்.இது போன்ற சில விழாக்கள் குறிப்பிட்ட பகுதி மக்களால் மட்டுமே கொண்டாடப்பட்டிருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

**பங்குனிவிழா:**

தமிழர்கள் மாதந்தோறும் விழாக்கள் எடுத்து கொண்டாடியுள்ளனர்.பங்குனி மாதத்தில் முருகனுக்கு விழா எடுத்திருக்கின்றனர்.அதற்கு பங்குனி உத்திரம் என்று பெயர்.

“ **வென்றெறி முரசின் விறல்போர்ச் சோழர்**

**இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்;**

**வருபுனல் நெரிதரும் இகுகரைப் பேரியாற்று**

**உருவவெண் மணல்முருகு நாறு தண்பொழில்**

**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்”(அக:137)**

சோழர்களின் தலைநகராகிய உறையூரில் பங்குனி விழா கொண்டாடப்பட்டதை அறியமுடிகின்றது. இவ்விழா இன்றும் பங்குனி உத்திரம் என்ற பெயரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது குறிப்பிடத்தக்கது.

**கார்த்திகை விழா:**

கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படும் விழா கார்த்திகை விழா. சமய விழாக்களில் குறிப்பிடத்தகுந்தது கார்த்திகை விழாவாகும். ஏனெனில் அறச்செயல்கள் செய்வதற்கு ஏற்ற மாதம். எனவே கார்த்திகை நட்சத்திரத்தை ‘அறுமீன்’ என்றும், கார்த்திகைத் திங்களை ‘அறம்செய் திங்கள்’ என்றும் நற்றிணைப் பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

**“அறுமீன் பயந்த அறம்செய் திங்கள்”(நற்றிணை:202)**

விழாக்கள் என்றாலே வீட்டினை ‘அழகுப்படுத்துதல்’ என்பது முக்கியப் பங்கு வகிக்கிறது. தூய்மைப்படுத்துதல், தோரணங்கள் கட்டுதல், விளக்கு ஏற்றுதல், கோலமிடுதல் போன்ற செயல்களைப் பெண்கள் மேற்கொள்வர். கார்த்திகை விழாவினை சிறப்பிப்பதற்காக வீடுகளும் தெருக்களும் அலங்கரிக்கப்பட்டதை அகநானூற்றுப் பாடல்

**“அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**

**மறுகுவிளக் குறுத்து மாலை நோக்கி”(அகநானூறு:141)**

என்று எடுத்துரைக்கின்றது.இன்றைய நாளில் ஏற்றப்பட்ட விளக்கின் ஒளியானது வானத்து நட்சத்திர,சந்திரனின் ஒளியைவிட விஞ்சி நிற்கின்றது.

**“--------------அறம்செய் திங்கள்**

**பல்பூங் கோங்கம் அணிந்த நாடே”(நற்றிணை:202)**

**“பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்**

**இலையில் மலர்ந்த இலவமொடு” (அகநானூறு:185:11)**

என்று அகஇலக்கியங்களில் கார்த்திகை விழாவிற்காக வீடுகளிலும், முற்றங்களிலும்,மாடங்களிலும் வரிசையாக ஏற்றி வைக்கப்பெற்ற விளக்கு கோங்க மரங்களிலும், இலவ மரங்களிலும் நெருக்கமாக மலர்ந்துள்ள பூக்களுக்கு உவமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பொருள்தேடச் சென்ற தன் கணவன் கார்த்திகை விழாவினைத் தன்னுடன் கொண்டாட வருதலை விரும்புகிறாள் என்று அகப்பாடலொன்று சுட்டுவதிலிருந்து கார்த்திகை விழாவின் சிறப்பு அறியலாகின்றது.

**காமன்விழா:**

இளவேனிற்காலமானது காமவேளுக்கு உரியதாகக் கருதப்படுகின்றது. இக்காலத்தில் நடக்கக்கூடிய விழா காமன் விழா.மன்மதனை காமன் என்று அழைத்தனர். மக்கள் இன்பமாக பொழுதைக் கழிக்க கொண்டாடிய விழா காமன் விழா.சிற்றூர்களில் மழை வேண்டி மன்மதனுக்கு விழா எடுக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. திருமணம் ஆகாத ஆண்களும் பெண்களும் காமனை வணங்குவதால் விரைவில்

திருமணம் நடக்கும் என்றும், குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப்பேறு கிட்டும் என்ற நம்பிக்கையும் இருந்துள்ளது. காமன்விழா உயர்ந்தவன் விழா, வில்லவன் விழா என்னும் பெயர்களில் கொண்டாடப்பட்டுள்ளது.

அருந்தவம் செய்தவர் அந்தத் தவத்தின் பயனை நுகர்வது போல கிளையெல்லாம் பூத்திருக்கும் பூக்கள் வண்டுகளும் தும்பிகளும் மொய்ப்பதால் தாது உதிர்ந்து இன்பம் நுகரும் வேனிற்காலம் என்றும்,இத்தகு காலத்தில் நான் தனிமையில் துன்புறுகிறேன் அவன் காமன் விழாவில் அணிகலன்கள் அணிந்த பரத்தையோடு விளையாடுகின்றானே எனத் தலைவி கவலையுற்று என் நிலையை அவனிடம் சொல்வார் இருந்தால் நன்றாக இருக்கும் என்று புலம்புவதைப் பாலைப்பாடிய பெருங்கடுங்கோ

**“ --------உயர்ந்தவன் விழவினுள்**

**விறலிழை யவரோடு விளையாடுவான் மன்னோ”(கலி:30:13)**

என்று தலைவியின் உணர்வுப்பிழிவுகளைச் சித்திரித்துக் காட்டுகின்றார்.காமன் விழா நடைபெறுகின்றது என்பதை அறிந்தால் பெண்கள் மிகுந்த வருத்தம் அடைவர்.ஏனெனில் இவ்விழாவில் ஆடவர் பரத்தையருடன் இன்புற்று மகிழ்ந்திடுவர். பொருள்வயிற்பிரிவு மேற்கொண்ட தலைவன் திரும்பி வருங்காலம் இளவேனிற்காலம். இக்காலத்தில் தலைவியின் மனவுணர்களை எண்ணுகின்றான். தலைவியின் இன்னலைப் பொறுத்தக்கொள்ள மாட்டாத தலைவனின் உயரிய செயலை விளக்கும் தோழி தலைவர் தேரினை விரைவாக செலுத்தி வந்தது உம்மை மகிழ்வக்கும் பொருட்டே என்று தலைவியிடம் உரைக்கும் பாங்கு செவ்வித்தாகும்.கீழ்க்காணும் பாடல்

**இப்பொருண்மையைக் கொண்டு அமைந்திருக்கின்றது.**

**“காமவேள் விழாவாயிற் கலங்குவள் பெரிதென**

**வேமுறு கடுந்திண்டேர்கடவி**

**நாம்அமர் காதலர் துணைதந்தார் விரைந்தே(கலித்தொகை:27)**

தலைவன் இல்லாமல் தனிமை துயரத்தில் இருக்கும் தலைவிக்கு காமன்விழா துயரத்தைக் கொடுத்ததை

**“காமவேள் விழவாயின்**

**கலங்குவள் பெரிதுஎன”(கலித்தொகை:29-24)**

**“காமவேள் அம்பின் தொழில்**

**வீற்றிருந்த நகர்”(பரிபாடல்:18:26-27)**

என்ற பதிவுகள் மெய்ப்பிக்கின்றன.

**காமவேள் விழாவில் காதலர்கள் களித்து விளையாடியதை**

**'மல்கிய துருத்தியுள்மகிழ்துணைப் புணர்ந்தவர்**

**வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ"(கலித்தொகை: 35)**

என்று சுட்டுகின்றது.

**புனல்விழா:**

புனல் விழா என்பது இலக்கியத்தில் 'நீர்விழா' என்று அழைக்கப்படுகின்றது. நீர் விழா அன்றைய நாளில் ஆடிப்பெருக்கு விழா என்று வழங்கப்படுகின்றது. மக்கள் காவிரி ஆற்றில் வருகிற புதுப்புனலில் நீராடி மகிழ்ந்தனர். அந்நாளில் புதுத் துணி உடுத்திப் புனல் ஆடி மகிழ்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.நீர்நிலைகள் மிகுதியாக நிரம்பிய நீர்விழா சோழவள நாட்டில் சிறப்பாக நடைபெற்றதை

**"கல்லா யானை கடிபுனல் கற்றென**

**மலிபுனல் பொருத மருது ஓங்குப் படப்பை" "(அக:376:3-5)**

என்னும் அகப்பாடல் வழி அறியமுடிகின்றது.

நீர்விழாவின் பொழுது பல்வேறு இசைக்கருவிகளைக் கொண்டு ஒலிகளை எழுப்பியுள்ளனர். ஆட்டனத்தியின் சிவந்த கால்கள் நீருக்கு மேலே வந்து புரண்டதையும்,இசைக்கேற்ப அவன் ஆடியதையும்

**"தண்பதம் கொண்டு தவிர்ந்த இன்னிசை**

**ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரள"(அக:376)**

என்பதிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகின்றது.

அத்தி காவிரியாற்றுக் கழார் என்னும் நீர்த்துறையில் நீரில் நடனம் ஆடிக் காட்டினான்.நீர் மிகுந்த துறையைக் கொண்ட ஊரின் பெயர் கழார்.இதன் கரையில் மருத மரங்கள் மிகுந்து காணப்படுகின்றன.நெற்கதிர்கள் வளமுடன் காட்சியளிக்கின்றன.

இவ் ஊருக்கு முன் இருந்த துறைக்கு கழார முன்துறை என்று பெயர்.அத்துறையில் அத்தி கரிகாலச்சோழன் காணும்படியாக நடனம் ஆடிக் காட்டினான்.இதிலிருந்து கரிகாலன் காலத்தில் நீர்விழா நடைபெற்றது என்பது வெள்ளிடைமலையாகின்றது.

**'கழாஅர் முன்துறை**

**கலிகொள் சுற்றமொடு கரிகாலன் காண"அக:376)**

விழாக்கள் பகல் பொழுதில் நடைபெற்றன. இரவு நேரத்தில் நிலவொளியில் ஆடலும் பாடலும் உற்சாகமாக நிகழ்ந்துள்ளன.மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியுள்ளனர். இதனை

**“நிலவே நீல்நிற விசும்பில்**
**பல்கதிர் பரப்பி**
**கலிகெழு மறுகின் விழவு**
**அயரும்மே”(நற:;348:1-4)**

என்னும் பாடலடிகள் கண்முன் நிறுத்துகின்றன.பரிபாடலிலும் நீர்விழாப் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

**“--------பூநீர் நிறைதலின்**
**படுகண் இமிழ் கொளை பயின்றனர் ஆடும்**
**களிநாள் அரங்கின் அணிநலம் புரையும்”;(பரி:16)**

**கோடியர் விழா:**

ஆடும் கலைஞர்கள் கோடியர் என்று அழைக்கப்பட்டனர். கூத்தர்கள் ‘கோடியர்’ என்றும்,வயிரியர் என்றும் அழைக்கப்பட்டனர். பாணர்களும் கூத்தர்களும் விழாக்களைச் சிறப்பிக்கும் கலைஞர்களாவர். இவர்கள் மக்களை மகிழ்விக்கும் பெரும்பணியில் பெயர் **பெற்றவர்கள். இவர்கள் தோலாலான இசைக்கருவிகளைக் கொண்டு இரவு நேரத்தில்** கலைகளை நிகழ்த்துவர்.விறலியர்கள் மயில்போல ஆடும்போது கூத்தர்கள் முழவை முழக்கிக் கொண்டு பின் செல்வதை

**“ஆடுமயில் முன்னது ஆக கோடியர்**
**விழவுகொள் மூதூர் விறலி பின்றை”(அகநானூறு:352:4-6)**

நெடுந்தொகை சுட்டிக்காட்டுகின்றது.

**“-------விழவில்**
**கோடியர் நீர்மை போல முறைமுறை**
**ஆடுநர் கழியும் ”(புற:29:22-23)**
**“விழவின் ஆடும் வயிரியர்”;(மது:628)**

என்று திருவிழாவில் ஆடும் கூத்தர்கள் வேடம் மாறி மாறி ஆடுவதையும், இடையாமத்தில் அயர்ந்து உறங்குவதையும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**பூந்தொடை விழா:.**

இது வீரர்களின் கலைப்பயிற்சித் தொடக்க விழா.வில்லில் நாணேற்றி குறிகண்டு எய்யும் விழா.வில்லையும்,வீரனையும் மலர் சாத்தி சிறப்புச் செய்வர்.வில் போட்டியும் நிகழ்த்தப்பெறும்.

**“வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்**
**பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன**

**தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்"(அக:187:7-9)**

என்னும் அகப்பாடல் போர்களத்தில் சினந்தெழுந்த பகைவரை முறியடித்து வென்ற மழவர்கள் எடுக்கும் விழா பூந்தொடை விழா என்றும், இவ்விழாவினைக் கொண்டாடுவதற்கு முன்பு வீட்டு முற்றத்தில் புதுமணல் பரப்பும் சடங்கினை பின்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கின்றது.

**வெறியாட்டுவிழா:**

வெறியாட்டுவிழா பண்டை நாளில் பெருவழக்காக இருந்துள்ளது. இவ்விழா முருகனுக்காக எடுக்கப்பட்டது. முருகனுக்காக வேலன் வேலினைக் கையிலேந்தி ஆடுவான். அப்பொழுது இன்னிசைக் கருவிகள் முழங்க தினையரிசியும் மலர்களும் தூவி வழிபட்டுள்ளனர்.

**"சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து**
**வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ**
**ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்"(திரு:218-220)**

என்ற நக்கீரர் பாடல் வழி குன்றுகள் இருக்கின்ற இடத்தில் எல்லாம் முருகன் இருப்பதாகக் கருதி, மலைப்பகுதியில் விளைந்த சிறுதினையை மலருடன் சேர்த்து பரப்பி, ஆட்டினைப் பலியிட்டும் கோழிக் கொடியை நட்டும் முருகன் குடியிருக்கும் இடமாகக் கருதி இவ்விழாவினைக் கொண்டாடியுள்ளச் செய்திப் புலனாகிறது.

இந்திரவிழா:

மருதநிலக் கடவுள் இந்திரன். இந்திரனை சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்பட்ட விழா இந்திரவிழா. இலக்கியங்களில் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. தொடித்தோட் செம்பியன் எடுத்த காதல் விழாவைக் காமன் விழா என்றும், இந்திரவிழா என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்விழா 28 நாட்கள் நடைபெற்றிருக்கின்றது.. இவ்விழாவினை 'விருந்தாட்டுவிழா' என்றும் அழைப்பர்.இந்திர விழாவில் பூ கொட்டிக் கிடப்பது போலக் காணப்படும் பெட்டைக் கோழியானது கோடு கோடா இருக்கும் வரி நிழலில் நின்று கொண்டு சேவலை அழைக்கும் இந்த ஊரில் உள்ள புதுப்பெண்களை எல்லாம் துய்த்து விட்டு ,இப்போது எந்த ஊரில் தேரை நிறுத்தி இருக்கின்றாய் என்று தலைவனிடம் கேட்டு தலைவி ஊடல் கொள்ளும் பாடலில் இந்திரனுக்கு எடுக்கப்படும் விழாப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

**"இந்திர விழவிற் பூவின் அன்ன"(ஐங்குறுநூறு:62:1)**

வச்சிரக்கோட்டம் என்பது இந்திரனின் கோயில.இக்கோயிலில் இருந்த முரசத்தை எடுத்து யானையின் பிடரியில் ஏற்றி, யானை மீதமர்ந்து விழாச் செய்தியை ஊருக்கு அறிவித்தனர்.கால்கோள் முதல் கடை நிகழ்ச்சி வரை நவின்றனர்.இந்திரனுக்கு நீராட்டுவிழா நடத்தினர் என்பதை இளங்கோவடிகள்

**'வச்சிரக்கோட்டத்து மணம்கெழு முரசம்**

**கச்சை யானைப் பிடர்தலை ஏற்றி**

**கால்கோள் விழவின் கடைநிலைச் சாற்றி"**

**(சிலப்பதிகாரம்- இந்திரவிழவு ஊரெடுத்தக்காதை - 141-144)**

என்று புகாரில் நடைபெற்ற இந்திர விழாவினைக் குறிப்பிடுகின்றார்.

மணிமேகலையில் விழாவறை காதையில்இந்திரவிழா பற்றி விளக்கப்பட்டுள்ளது.பசி, பிணி, பகை முதலியவற்றால் துன்பம் அடையாது இருத்தல் பொருட்டுத் தெய்வத்தைக் கருதிச் செய்யும் சாந்திப் பெருவிழாவே இந்திரவிழா என்பதை சாத்தனார். "தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்"என்கின்றார். இவ்விழா புகார் என்ற நகரோடு அதிகம் தொடர்புடையது. புகார் நகர மக்களுக்கு துன்பம் நேராமல் இருக்க சமயக்கணக்கர்,ஐம்பெருங்குழு, எண்பேராயத்தினர் குழுமி இந்திரனுக்கு விழா எடுக்க முடிவு செய்தனர்.இதனை

**'மாயிரு ஞாலம் அரசுதலை ஈண்டும்**

**ஆயிரங் கண்ணோன் விழாக்கால் கொள்க"**

**என்று சீத்தலைச்சாத்தனார் உரைக்கின்றார்.**

இவற்றிலிருந்து இந்திரவிழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.மேலும் கற்பகக் கோட்டத்தில் வெள்ளானைக் கொடி ஏற்றப்பட்டு,பல தெய்வங்களுக்கும் பூசையிடப்பட்டு, இசையும் கூத்தும் கலந்து மக்கட்கு இன்பமூட்டும் நிகழ்வுகள் நடைபெற்று,அறிஞர்கள் குழுமியிருந்து பட்டி மண்டபத்தில் வாதிட்டு,. பல்வேறு சமயத்தவரும் செற்றமும் கலகமும் செய்யாது ஒற்றுமையாய் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதிலிருந்து இந்திவிழா சமய ஒற்றுமையை வலியுறுத்தும் விழாவாக இருந்திருக்கின்றது என்றும்,அக்கால நாகரிகச் சிறப்பிற்கு ஓர் சான்றாக திகழ்ந்திருப்பதும் புலனாகின்றது.

**தைநீராட்டுவிழா:**

இவ்விழாவானது இளம்பெண்கள் தங்களுக்கு கணவனாக வரவேண்டிய ஆண்மகன் நற்பண்புடையவாரக இருக்க வேண்டும் என நோன்பிருப்பதாகும். இளம்பெண்கள் தங்களது தோழியருடன் ஊரிலுள்ள குளத்தி;ல் தைத் திங்களில் நீராடி இவ்விழாவினைக் கொண்டாடினர் என்பதை ஐங்குறுநூறு,

"**நறுவீ யைம்பான் மகளி ராடும்**

**தைஇத் தண்கயம் போலப்**

**பலர்படிந் துண்ணுநின் பரத்தை மார்பே 5**

**என்றும்,**

**'தைஇத் திங்கள் தண்கயம் போல"(புற:70)**

**எனப் புறமும் குறிப்பிடுகின்றது.**

**"தைத் திங்கள் தண்கயம் படியும்**

**பெருந்தோட் குறுமகள்**

**"தையில் நீராடிய தவந்தலைப் படுவோளே 6**

என்று நற்றிணையிலும், கலித்தொகையிலும் தைநீராடல் பற்றிய குறிப்பு காணப்படுவதிலிருந்து இவ்விழாவானது சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

**தொகுப்புரை**

சங்ககாலத்தில் நாடு செழிக்கவும், உறவுகள் வளம்பெறவும்,இயற்கைக்கு நன்றி செலுத்தவும்,கலைகளை வளர்க்கும் பொருட்டும்;, மன்னனை மகிழ்விக்கும் அடிப்படையிலும், வீரர்களின் ஆற்றலை மதிக்கும் வண்ணமும், இசைக்கலைஞர்களைப் போற்றும் விதமாகவும், மக்கள் மகிழ்ச்சியில் விளையாடி திளைக்கவும் விழாக்கள் எடுத்துள்ளனர்.ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு பெயர்களில் கொண்டாடப்பட்டிருக்கின்றன.இன்றும் அரசு விழாக்கள், சிற்றூர் விழாக்கள் என்று கொண்டாட்டங்கள் நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றன.

**சாண்றொன் விளக்கம்**

1.-குறுந்தொகை பக் 41:2

2. புறநானூறு பக்-212-1:6

3. மதுரைக்காஞ்சி பக்-.590-591

4. அகநானூறு: பக் 61

5. ஐஙகுறுநூறு-பக் -84

6. கலித்தொகை பக் 13

**பார்வை நூல்கள்**

டாக்டர் சி.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியம் சில பார்வைகள், நறுமலர் பதிப்பகம்,பாரி நிலையம் 184 பிராட்வே சென்னை -600 108